# ICAR – வேளாண் அறிவியல் மையம்
## திருநெல்வேலி (தென்காசி) மாவட்டம்

## பொதிகை சாரல் - செய்தி மடல்

செய்தி : 2 மடல் : 2 ஏப்ரல் - செப்டம்பர் (2022)

### இயற்கை விவசாயம் குறித்த உழவர் கண்காட்சி (Kisan Bhagidari - Prathmikta Hamrai-Azadi Ka Amrit Mahotsav)

வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ம் தேதி இயற்கை விவசாயம் குறித்த உழவர் கண்காட்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குநர் திருமதி. தமிழ்மலர் அவர்கள் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் துணை இயக்குநர், செயற்பொறியாளர், வேளாண் உதவி இயக்குநர் மற்றும் வேளாண் உதவி அலுவலர்கள் பங்குபெற்றவர். மாண்புமிகு வேளாண் அமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக ஆற்றிய வேளாண் நலத்திட்டங்கள் குறித்த உரை வேளாண் அறிவியல் மையத்தில் வைத்து நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து இயற்கை விவசாயம் குறித்த தொழில்நுட்ப பயிற்சி மற்றும் ட்ரோன் தெளிப்பு முறை குறத்த செயல் விளக்கமும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியின் முடிவில் தொழில்நுட்ப கையேடுகள் வெளியிடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 262 விவசாயிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.



### விவசாயிகள் விஞ்ஞானிகள் சந்திப்பு மற்றும் நலிந்தோர் நலவாழ்வு மாநாடு



2022ம் ஆண்டு மே மாதம் 31ம் தேதி வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் பிரதம மந்திரி அவர்கள் காணொலி வாயிலாக ஆற்றிய உரை விவசாயிகளுக்கு நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து தென்காசி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தனுஷ் **M.**குமார் அவர்கள் தலைமை வகித்து விவசாயிகளுக்கு மத்திய அரசின் வேளாண்மை சார்ந்த நலத்திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றம் வேளாண் அலுவலர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இயற்கை விவசாயம் மற்றும் வேளாண்மை சார்ந்த நலத்திட்டங்கள் பற்றிய தொழில்நுட்ப உரையினை வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர்கள் எடுத்துரைத்தனர். இந்நிகழ்ச்சியில் முதல்நிலை செயல் விளக்க திட்டங்களுக்கான வேளான் இடுபொருட்கள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் இறுதியில் ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் தேனி வளர்ப்பு குறித்த தொழில்நுட்ப கையேடுகள் வெளியிடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 509 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

### மாவட்ட அளவிலான தோட்டக்கலை கண்காட்சி (சாரல் திருவிழா) 2022

தென்காசி மாவட்டம் தோட்டக்கலை துறை சார்பாக நடத்தப்பட்ட "சாரல் திருவிழா" கண்காட்சியில் வேளாண் அறிவியல் மையம் சார்பாக வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய இரகங்கள், தொழில்நுட்பங்கள், பாரம்பரிய நெல் இரகங்கள், மதிப்பூட்டப்பட்ட வேளாண் பொருட்கள் மற்றும் தொழில்நுட்ப கையேடுகளும் காட்சிப்படுத்தப்பட்டது. இதன்மூலம் திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டத்தைச் சார்ந்த 1500க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.







### உலக தேனீ தின விழா



வேளான் அறிவியல் மைய வளாகத்தில் 2022ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19 முதல் 21ம் தேதி வரை "தேனீ வளர்ப்பு" குறித்த மூன்று நாள் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் விவசாயத்தில் தேனீ வளர்ப்பின் பங்கு மற்றம் முக்கியத்துவம், தேனீ இனங்கள், பராமரிப்பு தொழில்நுட்பங்கள், இடத்தேர்வு, தேனீயைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்கள், கட்டுப்படுத்தும் முறைகள், தேன் எடுக்கும் முறைகள் மற்றும் தேனில் மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. இதில் 25 விவசாயிகள் பயிற்சி பெற்று பயனடைந்தனர்.

### ஒருங்கிணைந்த பண்ணையம் பற்றிய திறன் மேம்பாட்டு பயிற்சி

வேளாண் அறிவியல் மையம் மற்றும் நபார்டு, திருநெல்வேலி இணைந்து கிராமப்புற இளைஞர்களுக்கான 'ஒருங்கிணைந்த பண்ணையம்' பற்றிய திறன் மேம்பாட்டு பயிற்சி 2022ம் ஆண்டு மே மாதம் 9ம் தேதி முதல் 11ம் தேதி வரை வேளாண் அறிவியல் மையத்தில் வைத்து நடைபெற்றது. இப்பயிற்சியில் ஒருங்கிணைந்த பண்ணையத்தின் முக்கியத்துவம், நோக்கம், நன்செய், புன்செய் மற்றும் மானாவாரி நிலங்களுக்கான ஒருங்கிணைந்த பண்ணைய முறைகளும் எடுத்துரைக்கப்பட்டது. வேளாண் சார்ந்த தொழில்நுட்பங்களான தேனீ வளர்ப்பு, பட்டு வளர்ப்பு, காளான் வளர்ப்பு, வேளாண் காடுகள் மற்றும் கால்நடை வளர்ப்பின் பங்களிப்பு ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இப்பயிற்சியின் ஒருபகுதியாக அருப்புக்கோட்டையில் உள்ள மண்டல ஆராய்ச்சி நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு மானாவாரி நிலத்திற்கான ஒருங்கிணைந்த பண்ணைய மாதிரித் திடல்கள் விவசாயிகளுக்கு நேரடியாக காட்சிப்படுத்தப்பட்டது. இறுதியில் விவசாயிகளுக்கு பயிற்சிக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.



### நிலக்கடலையின் தரணி இரகத்திற்கான வயல் விழா



கடையநல்லூர் வட்டாரம் வலசை கிராமத்தில் வேளாண் அறிவியல் மையம் சார்பாக தொகுப்பு முதல்நிலை செயல்விளக்கம் மூலம் நிலக்கடலையின் தரணி ரகம் விதைகள் 25 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் சுமார் 10 ஹெக்டேர் நிலப்பரப்பில் விவசாயிகள் தரணி ரக நிலக்கடலை சாகுபடி செய்தனர், இதன் தொடர்ச்சியாக 25.05.2022ம் தேதி அன்ற வயல் விழா நடத்தப்பட்டது. இதில் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் தரணி ரகத்தின் சாகுபடி முறை, பூச்சி மற்றும் நோய் தாக்குதல், மகசூல் குறித்து விவசாயிகளிடம் கலந்துரையாடினார். மேலும் முன்னோடி விவசாயிகள் தரணி ரக நிலக்கடலை சாகுபடி குறித்த தங்களது அனுபவங்களை மற்ற விவசாயிகளுடன் பகிர்ந்து கொண்டனர்.

### உலக உணவு பாதுகாப்பு தினம்

வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் 2022ம் ஆண்டு ஜுன் மாதம் 7ம் தேதி அன்று "உலக உணவு பாதுகாப்பு தினம்" குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. உணவு பாதுகாப்பு முறை, முக்கியத்துவம், ஆரோக்கியமான உணவினை உற்பத்தி செய்யவும், உபயோகிக்கவும் மற்றும் பாதுகாப்பான உணவுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்நிகழ்ச்சி அமைக்கப்பட்டது. மேலும் சுகாதாரமான முறையில் உணவு சமைத்தல் குறித்து விவரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 45 கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



## மண் வள முகாம்



தென்காசி மாவட்டம் நெடுவயல் கிராமத்தில் மண் வளம் குறித்த முகாம் நடத்தப்பட்டது. இதில் மண் வள மேலாண்மையின் முக்கியத்துவம் பிரச்சனைக்குரிய மண் வகைகளின் சீரமைப்பு நடவடிக்கைகள் மற்றம் மண் வள மேம்பாட்டில் உயிர் உரங்களின் பங்கு குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் மண் மாதிரி சேகரிப்பு முறை மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்தி விதை நேர்த்தி குறித்து செயல்விளக்கங்கள் மூலம் எடுத்துரைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற 25 விவசாயிகளிடம் இருந்து மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.

## ஊட்டச்சத்து தோட்டம் அமைத்தல் மற்றும் மரம் வளர்ப்பு பற்றிய தேசிய விழிப்புணர்வு நிகழ்ச்சி

வேளாண் அறிவியல் மையம் மூலமாக திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ம் தேதி ஊட்டச்சத்து மாதம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் துறை அதிகாரி, திருமதி. ஜெயஸ்ரீ செல்லையா, ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு சேவைகள் திட்ட அலுவலர், திருமதி. தனலட்சுமி, புள்ளியியல் துறை ஆய்வாளர், திரு. சண்முகசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். வேளாண் அறிவியல் மைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் ஊட்டம் ஏற்றிய பயிர்கள் மற்றும் சிறுதானியங்களின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். திரு. மு.இளவரசன் தொழில்நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை) மற்றும் திருமதி. க.திருமலைச்செல்வி தொழில்நுட்ப வல்லுனர் (மனையியல்) ஆகியோர் வீட்டுத்தோட்டம் அமைத்தல் பற்றியும், தினசரி உணவு உட்கொள்ளுதலில் சிறுதானியத்தின் பங்கு குறித்து எடுத்துரைத்தார்.




## ஜல் சக்தி அபியான் – பயிற்சி மற்றும் மேளா



வேளாண் அறிவியல் மையம், சார்பாக இடைகால் கிராமத்தில் "ஜல் சக்தி அபியான்" திட்டத்தின் கீழ் நீர் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி நடத்தப்பட்டது. JSA திட்டத்தின்கீழ் நீர் மேலாண்மை, நீர் பாதுகாப்பு மற்றும் சேகரிப்பு முறைகள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கு மரக்கன்றுகள், விதைகள், உயிர் உரங்கள் ஆகியவை வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் 60 விவசாயிகள், வேளாண் உதவி இயக்குநர், உதவி வேளாண் அலுவலர், பஞ்சாயத்து உறுப்பினர்கள் மற்றும் வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர்கள் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தின்கீழ் வேளாண் அறிவியல் மையத்தில் 2022ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30ம் தேதி உழவர் திருவிழா நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் எலுமிச்சை ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர், முனைவர். ராஜமாணிக்கம், தோட்டக்கலை பயிர்களில் நீர் பாதுகாப்பு நுட்பங்கள் குறித்து தொழில்நுட்ப உரை ஆற்றினர். தென்காசி உதவி பொறியாளர் திரு. திருப்பதி நீர் சேகரிப்பு தொடர்பான திட்டங்கள் குறித்து விரிவுரை ஆற்றினார். வேளாண் அறிவியல் மைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் நீர்ப்பாசன மேலாண்மை பற்றி எடுத்துரைத்தார். மேலும் இந்நிகழ்ச்சியில் வேளாண் அலுவலர்கள், பஞ்சாயத்து உறுப்பினர்கள் மற்றும் கல்லூரி மாணவர்களும் பங்கேற்றனர். விவசாய நிலங்களில் நீர் பாதுகாப்பு மற்றம் மழைநீர் சேகரிப்பு முறைகள் பற்றிய கண்காட்சி கல்லூரி மாணவர்களால் அமைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் இறுதியில் தென்னை நாற்றுகள் மற்றும் நீர் மேலாண்மை குறித்த கையேடுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.



ஏப்ரல் - செப்டம்பர் (2022)

## பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரம்

வேளாண் அறிவியல் மையம் சார்பாக 2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 முதல் 22ம் தேதி வரை "பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரம்" குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பல்வேறு கிராமங்களில் நடத்தப்பட்டது. அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் மாணவர்களிடையே பார்த்தீனியம் ஒழிப்பு பற்றியும், பார்த்தீனிய களைப் பயிர்களால் மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் அதனை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன்பெற்றனர்.



## உரப் பயன்பாட்டிற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி



வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் 2022ம் ஆண்டு ஜூன் மாதம் 21ம் தேதி அன்று உரப்பயன்பாடு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மண்வள மேலாண்மையில் உயிர் உரங்களின் பங்கு, சரியான முறையில் உரங்களைப் பயன்படுத்தும் முறை, சீரான உரத்தின் அளவு ஒருங்கிணைந்த உர மேலாண்மை மற்றும் NANO உரங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன்பெற்றனர்.

## நிலைய மற்றும் களப்பயிற்சி நிகழ்வுகள்

வேளாண் அறிவியல் மையம் சார்பாக 2022ம் ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் மாதம் வரை 31 நிலையப்பயிற்சிகள் நடத்தப்பட்டது. இதில் 960 விவசாய பெருமக்கள் பயன்பெற்றனர். மேலும் 29 களப்பயிற்சிகள் திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் பல்வேறு கிராமங்களில் நடத்தப்பட்டது. இதில் 871 விவசாய பெருமக்கள் பங்குகொண்டு பயன்பெற்றனர். இப்பயிற்சியில் விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் பல்வேறு தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டது.



## நிதியுதவி பெற்ற பயிற்சி



வேளாண் அறிவியல் மையம் மற்றும் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் இணைந்து 2022ம் ஆண்டு செப்டம்பர் 21ம் தேதி முதல் 23ம் தேதி வரை வெங்காயத்தின் உற்பத்தி தொழில்நுட்பம் குறித்த மூன்று நாள் பயிற்சி வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் நிலம் தயாரித்தல், விதை நேர்த்தி, நாற்றாங்கால் மேலாண்மை, களை கட்டுப்பாடு, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை மற்றும் அறுவடைக்கு பின்சார் தொழில்நுட்பங்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 40 விவசாயிகள் பங்கு கொண்டு பயன்பெற்றனர்.

### வேளாண் அறிவியல் மையம், தென்காசியில் விற்கப்படும் தொழில்நுட்ப உற்பத்தி பொருட்கள்

| | | |
|---|---|---|
| ஒட்டு ரக கன்றுகள் (மா) | நீல அட்டை | வாழை நுண்ணூட்ட ஸ்பெஷல் |
| தென்னை நாற்றுகள் | டிரைக்கோடெர்மா விரிடி | காய்கறி சிறப்பு நுண்ணூட்டக் கலவை |
| மண்புழு உரம் | பாஸ்போ பாக்டீரியா | சிட்ரஸ் ஸ்பெஷல் |
| அசோலா | அசோஸ்பைரில்லம் | தீவன சோளம் CO(FS) 29 |
| தென்னை இன கவர்ச்சி பொறி | ரைசோபியம் | தீவன சோளம் CO(FS) 31 |
| காண்டாமிருக வண்டு பொறி | பல நுண்ணூட்ட உர கலவை | வேலி மசால் |
| சிவப்பு கூன் வண்டு | TNAU பயறு ஒன்டர் | TNAU நிலக்கடலை ரிச் |
| இன கவர்ச்சி பொறி | TNAU பருத்தி பிளஸ் | TNAU தென்னை டானிக் |
| பழ ஈ பொறி | TNAU மக்காச்சோளம் மேக்சிம் | |
| மஞ்சள் அட்டை | TNAU கரும்பு பூஸ்டர் | |

### வேளாண் அறிவியல் மையம், தென்காசியில் விற்கப்படும் மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருட்கள்

| | |
|---|---|
| கருவேப்பிலை & புதினா சர்பத் | வெட்டிவேர் சோப்பு |
| மாம்பழ சர்பத் | பீட்ரூட் மால்ட் பொடி |
| எலுமிச்சை சர்பத் | தேங்காய் எண்ணெய் |
| வல்லாரை சர்பத் | கடலை எண்ணெய் |
| தக்காளி சர்பத் | வீட்டு காய்கறி தோட்ட விதைகள் |
| கொய்யா சர்பத் | உ பவுடர் |
| செம்பருத்தி சர்பத் | ஹெர்பல் பவுடர் |
| ஆவாரம் சர்பத் | |
| பீட்ரூட் சர்பத் | |

**ICAR RVS வேளாண் அறிவியல் மையம், ஊர்மேலழகியான் கிராமம், ஆய்க்குடி அஞ்சல்,**

**கடையநல்லூர் வட்டாரம், தென்காசி மாவட்டம்** - 627852

அலைபேசி எண் : +91 4633 292500 மின்னஞ்சல் : tirunelvelikvk@gmail.com இணையதளம் : www.rvskvk.org